வண்ணப் படக்கதை
கரும்புலி
கலக்கும்
அம்மன் சிலை

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளி தோறும்

சிறுவர் தங்கமலர்

- ★ அட்டையில் உங்கள் குழந்தையின்படம்
- ★ புராண படக்கதை
- ★ துப்பறியும் படக்கதை
- ★ குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
- ★ மாயாஜால சிறுவர் தொடர்கதை
- ★ சிறுகதைகள்
- ★ பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளி தோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்

ராணி காமிக்ஸ் – 444
(மாதம் இருமுறை)

டிசம்பர் 16, 2002.

கரும்புலி அட்டகாசம்!

அம்மன் சிலை



கரும்புலி



ஊர்த் தலைவரின்
மகள்

அம்மன்
சிலை

ஊர்த் தலைவர்

கொள்ளைக்காரன்


கரும்புலி– காட்டு மக்களின் காவலன். தங்கத்திலான அம்மன் சிலையைக் கடத்த முயற்சி நடக்கிறது. கடத்தல்காரர்களின் இரகசியக் கூட்டம் நடந்தது.
டாம்! தங்கச் சிலையைப் பற்றிச் சொல்லேன்!


கடல் வழியே போனால் ஒரு காடு வரும். அந்தக் காட்டில் தங்கம் கிடைத்தது!
காட்டிலா?


ஆமாம்! காட்டுவாசிகள் அந்தத் தங்கத்தை எடுத்தார்கள்.
தங்கத்தை உருக்கி அம்மன் சிலை செய்தார்கள்.
அந்தச் சிலை எங்கே இருக்கிறது?
காட்டுவாசிகளின் கோவிலில் இருக்கிறது.
அம்மன் சிலையை நாம் கைப்பற்ற வேண்டும்!


சாமி சிலை கடத்தல்காரர்கள் அடுத்த நாள் இரண்டு படகுகளில் புறப்பட்டார்கள்.
அழகான காடு!

கரையிலிருந்து சோனாவாரி கிராமம் எவ்வளவு தூரம்?
காட்டுக்குள் போக வேண்டும்!

அதை ஏன் இப்போது நினைக்கிறாய்! பொற்சிலையை நினை!!

திடீர் என்று
புஸ்... ஸ்... ஸ்...
ஆ...!
கடல் பாம்பு! வேகமாப் போ!


ஒரு படகு மூழ்கிப்போயிற்று! ஒரு படகு தப்பியது!
ரோசன்! நாம் மூன்று பேரை இழந்தோம்!
கடல் பாம்பா இவ்வளவு பெரிதாக? நான் நினைக்கிறேன், இது ஒரு “அனகொண்டா”!


இதுதான் சோனாவாரி— காட்டுவாசிகளின் கிராமம்!
இந்த ஆண்டு நல்ல மழை— நல்ல செழிப்பு. அம்மனுக்கு கோலாகலமாக விழாக் கொண்டாட வேண்டும்.


உல்லாசப் பயணம் போவது போலிருக்கிறது!
ஆனால், சிலையைக் கைப்பற்றுவது அவ்வளவு எளிதல்ல! காட்டுவாசிகள் தங்களின் உயிர் போல சிலையை நினைக்கிறார்கள்!
நமது துப்பாக்கிகள் அவர்களின் உயிரைக் குடிக்கும்!


அவர்களிடம் வில்– அம்புகளே! ஆனால், அம்புகளில் நஞ்சு தடவியிருப்பார்கள்!


அம்மன் அருளால் அடுத்த ஆண்டு நாம் இன்னும் செழிப்பாக இருக்க வேண்டும்!

இதுதான் அம்மன் கோவில்.
அம்மா! அம்மன் சிலை தங்கத்தால் செய்யப்பட்டது என்கிறார்களே, உண்மையா?
மெய்தான் மகனே!

படகு வருவதை ஒரு காட்டுவாசி பார்த்தான்.

சிலை கடத்தல்காரர்கள் கரையிறங்கினார்கள்.

அவர்கள் நம்ம
ஊருக்குத்தான்
வருகிறார்கள் !


அவனைப் பார்த்துவிட்டார்கள் !
சுட்டுத் தள்ளு !

தலைவா

அலறிக்கொண்டு தலைவனிடம் ஓடிவந்தான்.
தலைவா! கொள்ளைக்காரர்கள் வருகிறார்கள்!
முதலில் உன்னைக் கவனிக்கிறேன். வைத்தியரை வரச்சொல்லுங்கள்!


சிலைத் திருடர்கள் கிராமத்தைச் சுற்றிவளைத்தார்கள்!
யாரும் அசையக் கூடாது! அசைந்தால், உயிர் இருக்காது!!

உங்களுக்கு
என்ன வேண்டும்?
எதுக்காக இங்கே
வந்திருக்கிறீர்கள்?


உங்கள் கோவிலில்
இருக்கும் தங்கச் சிலை
வேண்டும்!
ஆ...! அம்மன்
சிலையா!! அது எங்கள்
காவல் தெய்வம்!!


ஒரு காட்டுவாசி வில்லை உயர்த்தினான்!
இது உங்கள் உயிரைக் குடிக்கும்! ஓடிவிடுங்கள்!!

கொள்ளைக்காரன் சுட்டான்!
ஆ...! சுடாதே!
டுமீல்...!


கடல் பாம்பு ஒருவரை விழுங்கியது!
அய்யோ...


பாம்பு வாலால் படார் அடி! ஒரு படகு கவிழ்ந்தது!!
கடவுளே! காப்பாற்று!

நீதான் ஊர்த் தலைவனா?
ஆமாம்!

எங்கள் உயிரைத் தருவோமே தவிர அம்மன் சிலையைத் தரமாட்டோம்!
எங்களுக்கு அம்மன் சிலைதான் வேண்டும்! அது தங்கச் சிலை ஆயிற்றே!!

நீங்கள்
போய்ச் சிலையை
எடுங்கள்!

யாராவது
தடுத்தால், இவரது
உயிர் பலியாகும்!
அப்பா!!


இவள் ஊர்த் தலைவரின் மகள் ரீமா.
கரும்புலிக்கு உடனே தெரிவிக்க வேண்டும்!


கழுகு காலில் கடிதத்தைக் கட்டி அனுப்பினாள்.
குரு! இதை உடனே கரும்புலியிடம் சேர்!
கிரீச்!

கரும்புலியிடம் கழுகு வேகமாகப் பறந்து வந்தது.
ஏதோ அவசரச் செய்தி என்று நினைக்கிறேன் !


கடிதம்!
ரீமாவிடமிருந்து!

கரும்புலி கடிதத்தைப் படித்தார்.
சிலை கடத்தல் கும்பலிடம் அப்பா! உடனே காப்பாற்ற வரவும்!!

கரும்புலி உடனே புயல் வேகத்தில் கிளம்பினார்!
ஆபத்து! டைகர்! வேகமா வா!!

ஊரில் எல்லா வீடுகளும் காலி!
துப்பாக்கி முனையில் ஊர்த் தலைவர்!
தலைவரை ஒன்றும் செய்து விடாதீர்கள்! அம்மன் சிலையை வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள்!

தலைவரே! கோவில் சாவி எங்கே?


கரும்புலியை இன்னும் காணோமே?
கடிதத்தைக் கொடுத்துவிட்டுக் குரு திரும்பி விட்டதே!


கோவில் சாவியை எடும்!
என் ஆவி போனாலும் கோவில் சாவியைத் தரமாட்டேன்!


ஆ...!
எடுடா சாவியை!


தலைவரின் உயிரைக் காப்பாற்ற ஒருவன் விரும்பினான்.
அம்மனின் நகைகள் இந்த அறையில்தான் இருக்கின்றன!
அறையைத் திற!


அறையைத் திறந்தான்!

விற்றால் கோடி கோடியாகக் கிடைக்கும்!
அறை முழுக்கத் தங்க நகைகள் மின்னின!


நகைகள் கொள்ளை போவதைத் தடுக்க வேண்டுமே!
கரும்புலியைச் சந்திக்க ரீமா கிளம்பினாள்!

ரீமா ஓடுவதை ஒருவன் பார்த்துவிட்டான்!
அந்தப் பெண் ஓடுகிறாள்! அவளைப் பிடி!!


கரும்புலியிடம் போய்விட்டால் பயமில்லை!

ஒருவன் பிடிக்க ஓடினான்! அவன் கழுத்தில் ஒரு கயிறு விழுந்தது!
ஓடாதே நில்!

ஆ...! யாரடா அது?


அவன் கயிற்றில் மாட்டிக்கொண்டான்!
ஆ...!

கரும்புலி வந்துவிட்டார்!

கரும்புலியிடம் ரீமா எல்லா விவரமும் தெரிவித்தாள்.
ஓ! அம்மன் சிலையைக் கொள்ளையடிக்க வந்திருக்கிறார்களா?


ஒரு கொள்ளைக்காரன் குன்று மீது காவலுக்கு நின்றான்!
டைகர்! உன் வேலையைக் காட்டு!!

டைகர் குன்று மீது ஏறியது!
ஒரே பாய்ச்சல்!
ஆ...!
பலே டைகர்!

அவன் பயந்து ஓடினான்!
அய்யோ ஆபத்து!


கரும்புலி கொடுத்த அடி அவன் மீது இடியாக இறங்கியது!
அய்யோ!!


கரும்புலி அவனைத் தூக்கிப் பந்தாடினார்.
அம்மா...
போதுமா?
இன்னும்
வேண்டுமா?

யாரோ முகமூடி!
அவனது முகமூடியைக்
கிழிக்கிறேன்!
அடடே! என் வாளை
உருவிவிட்டானா!!

எனக்கு வாள் எதுக்கு? கால் போதும்!
கழுதையா உதைக்கிறானே!

வாளைக் கீழே போடு!
ஒரே குத்து! உன்னைத் தீர்த்துக் கட்டிவிடுவேன்!!

கரும்புலியின் துப்பாக்கிகள் குண்டு மழை பொழிந்தன !
ஓ !
இப்போது என்ன சொல்லுகிறாய் ?
டுமீல்... டுமீல்... டுமீல்...

உன் கதையை முடிக்கிறேன்!
செத்தேன்!

கரும்புலி அடுத்த ஆளுக்குக் குறி வைத்தார்!
இவனுக்கு அம்பு போதுமே!
கரும்புலி அம்பு விடுத்தார்!
ஆ...
நாம் காவலுக்கு நிறுத்திய ஆட்களைக் காணோமே?

அந்தப் பெண்ணைப் பிடிக்கப் போயிருப்பார்கள்!
நம்ம வேலையை சீக்கிரம் முடிப்போம்!
நகைகளை மூட்டை கட்டிக்கொண்டார்கள்!
படகுக்குக் கொண்டுபோங்கள்!
கரும்புலி பார்த்துக்கொண்டிருந்தார்!

கரும்புலி செயலில் இறங்கினார் !
நில்லுங்கள் !
ஆ...!

கரும்புலி வந்து
விட்டார்!

உஸ்... சத்தமில்லாமல்
வேலையை முடிக்க
வேண்டும்!

நாம் எச்சரிக்கையாக இயங்காவிட்டால், தலைவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடும்!
அப்போது ஒரு துப்பாக்கி, கரும்புலியின் கழுத்தைக் குறி வைத்தது!
அசையாதே! அப்படியே நில்!!

துப்பாக்கி முனையில் கரும்புலி!


யார் நீ?

நீ யார்? முதலில் அதைச் சொல்! இங்கே ஏன் வந்தீர்கள்?

நீதான் கரும்புலியா? எங்களுக்குத் தங்க அம்மன் சிலை வேண்டும்! இல்லா விட்டால், ஊரையே அழித்துவிடுவோம்!
ஓகோ! சாமி சிலைகளைக் கடத்தும் கூட்டமா?
எங்கள் வேலையில் யாராவது குறுக்கிட்டால், முதலில் அவர்களைத் தீர்த்துக்கட்டி விடுவோம்!
கொள்ளையன் துப்பாக்கியை இயக்க...
டுமீல்....!
எங்கே அவன்?


கரும்புலி மரத்துக்குத் தாவிவிட்டார்!
நான் இங்கே இருக்கிறேன்!
நீ எங்கே போனாலும் விடமாட்டேன்!
டுமீல்...!

கரும்புலி அவன் மீது சிங்கம்
போலப் பாய்ந்தார்!
ஆ...!

இந்தா
வாங்கிக்கொள் !
கும்...!
ஆ...!

இன்னும் ஒண்ணு...
கும்...!
கரும்புலி தனது முழு ஆற்றலைக் காட்டினார்!
அம்மன் சிலையா வேண்டும்?
படார்!
அய்யோ...

இதுவரை
எங்கெங்கே
சிலைகள்
கொள்ளையடித்
-தீர்கள் ?
கொன்று
விடாதே !
சொல்லி
விடுகிறேன் !

சில கிராமவாசிகள்
ஓடிவந்தார்கள்.
கரும்புலி !
தலைவருக்கு
ஆபத்து !!
நீங்கள் இவனைக்
கவனியுங்கள் !


கோவில் சாவியை எடு! அல்லது உயிரை விடு!!

நேரமாகிறது! நீ அவன் உயிரை எடு!!

என் உயிரை எடுத்தாலும் அம்மன் சிலை உங்களுக்குக் கிடைக்காது! கரும்புலி காப்பாற்றுவார்!!


இவரை வைத்துத்தான் நாம் கரும்புலியைப் பிடிக்க வேண்டும்!


முதலில் இவரை
கப்பலில் ஏற்ற
வேண்டும்!


ஏ கிழவா!
கடற்கரைக்கு நட!!

நம்ம ஆட்கள்
யாரையும்
காணோமே?

எல்லாரும்
கப்பலுக்குப் போய்
விட்டார்களா?

அல்லது,
ஏதோ ஆபத்தா?

அவன் மீது கரும்புலி பாய்ந்தார்.
ஆபத்துதான்!
!


இவனுக்கு நல்ல தண்டனை வழங்க வேண்டும்!
என்னைக் கொன்று விடாதே!

கரும்புலி, தலைவரைக் காப்பாற்ற வந்தார்.
நில்! இவரைக் கொன்றுவிடுவேன்!

விலகிப் போ ! இல்லா விட்டால், இந்தக் கிழவனைக் கொன்று விடுவேன் !

டாம் ! எழுந்திரு ! இவனை வைத்தே நாம் தப்பிவிடலாம் !
என் இடுப்பு ஒடிந்து போச்சே


நடக்க முடியலையே!
நடக்கா விட்டால், உயிருக்கே ஆபத்து!

கரும்புலி அசைந்தால், இந்தக் கிழவனைத் தீர்த்துக்கட்டிவிட வேண்டியதுதான்!
என்னால் அசைய முடியவில்லை

அப்போது டைகர்...
!!
மரத்திலிருந்து டைகர் குபீர் என்று பாய்ந்தது!
கொர்ர்ர்...
ஆ...! என் துப்பாக்கி...

டைகர், உன்
குறி
தவறவில்லை!
மிகவும் நன்றி

கிராமவாசிகள் அவனைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள்.
யார் இந்தக் கருப்புலி?
உங்களைச் சிறையில் தள்ள வந்தவன்!



ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

சாமர்த்திய நரி

அடர்ந்த காட்டில் நரி ஒன்று உணவு தேடி அலைந்தது. இறந்து கிடந்த யானை ஒன்றைப் பார்த்தது. 'பல நாட்களுக்கு உணவு கிடைத்தது' என்று மகிழ்ந்தது.

தன் பற்களால் யானையின் தோலைக் கிழிக்க முயன்றது. ஆனால், முடியவில்லை.

அப்பொழுது அங்கே சிங்கம் ஒன்று வந்தது. அதைப் பணிவாக வணங்கியது நரி.

"அரசே! இந்த உணவை உங்களுக்காகப் பாதுகாத்து வருகிறேன்" என்றது.

மகிழ்ந்த சிங்கம் "நரியே! பிற விலங்குகள் கொன்றதை நான் உண்ண

மாட்டேன். நீயே சாப்பிடு" என்று சொல்லிவிட்டுச் சென்றது.

சிறிது நேரத்தில் புலி ஒன்று அங்கு வந்தது.

'இதை எப்படி ஏமாற்றுவது?' என்று சிந்தித்தது நரி.

"புலி மாமா! சாவைச் சந்திக்கவா இங்கு வந்தீர்கள்? இந்த யானையைக் கொன்ற சிங்கம் நீராடச் சென்று உள்ளது. என்னிடம் அது 'ஏதேனும் புலி வந்தால் குரல் கொடு. என் எதிரிகளாகிய புலிகளை எல்லாம் கொல்வதாக உள்ளேன்' என்று சொன்னது" என்றது.

நடுங்கிய புலி அங்கிருந்து ஓட்டம் பிடித்தது.

அடுத்ததாகச் சிறுத்தை ஒன்று அங்கே வந்தது.

அதைப் பார்த்த நரி,'இதற்கு வலிமையான பற்கள் உள்ளன. இதைக் கொண்டு யானையின் தோலைக் கிழிக்க வேண்டும். பிறகு இதை விரட்ட வேண்டும்' என்று நினைத்தது.

இனிய குரலில் அது "சிறுத்தை மாமா! உம்மைப் பார்த்து எவ்வளவு நாட்கள் ஆகிறது. பசியுடன் இருக்கும் நீர் என் விருந்தினர். இந்த யானையைக் கொன்ற சிங்கம் நீராடச் சென்று உள்ளது. அது வருவதற்குள் இதன் உடலைக் கிழியும். விருப்பம் போல் இறைச்சியை உண்டுவிட்டு ஓடிவிடும்" என்றது.

"நரியே! உன் அன்பிற்கு நன்றி! உயிருக்கு அஞ்சி உண்ணும் உணவு எனக்கு வேண்டாம்" என்று புறப்பட்டது.

"மாமா! நான் இருக்கும்போது நீர் அஞ்சலாமா? சிங்கம் தொலைவில் வரும்போதே நான் குரல் கொடுக்கிறேன். அதுவரை இறைச்சியை மகிழ்ச்சியாக உண்ணும்" என்றது.

சிறுத்தை தன் வலிமையான பற்களால் யானையின் தோலைக் கிழித்தது. இறைச்சியை உண்ண வாயை வைத்தது.

இதைப் பார்த்த நரி, "மாமா! சிங்கம் வருகிறது" என்று குரல் கொடுத்தது.

உயிருக்கு அஞ்சிய சிறுத்தை அங்கிருந்து ஓட்டம் பிடித்தது.

தன் எண்ணம் நிறைவேறியது என்று மகிழ்ந்தது நரி. யானையின் உடலைப் பல நாட்கள் உண்டது. ★

அடுத்த காமிக்ஸ்

வானவெளி மனிதன்

விண்டிரிக்

சாகசப் பாய்ச்சல்

மின்னல் தாக்குதல்

வண்ணப்
படக்கதை!

கூடுதல் பக்கங்கள்... குளுகுளு படங்கள்...

தூள்பரத்தும் செய்திகளுடன்!

ஜனவரி 1-ந்தேதி கிடைக்கும்

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

Regd.with the Registrar of Newspaper
for India under No. 42576/84 – ISSN 0971–8567

December 16, 2002.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

விற்பனையாகிறது!

"ராணி முத்து" காலண்டர்–2003

★ வீட்டுக்கு அழகுதரும் முருகன் படம்

★ கொஞ்சமும் தவறு இல்லாத பஞ்சாங்கக் குறிப்புகள்

★ நாள்தோறும் நல்லநேரம் குறிக்கப்பட்டு உள்ளது

"பெய்யெனப் பெய்யும் மழை" என்று சிறப்புப் பெற்ற ஒரே காலண்டர்!

"ராணி பிரிண்டர்ஸ்", சென்னை-600 007.